DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -20

| | | |
|---|---|---|
| Name | : திரு. பாபு | Caste: |
| Father's Name: | திரு. கொளஞ்சி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 11th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8 and A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**Date: 11.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடி கிராமத்தில் காலனிதெருவில் வசித்து வருகிறேன். தற்போது ஏ.சி மெக்கானிக்காக தொழில் செய்கிறேன். முன்னர் விவசாய கூலி வேலை செய்தேன். இறந்துபோன காசிநாதன், தர்மலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2007 ஆம் வருடத்தில் காசிநாதன் தலைமையில் ஒரு தரப்பினராகவும், 1 ஆம் எதிரி ரவிசந்திரன் தலைமையில் ஒரு தரப்பினராகவும் இருந்து வந்தார்கள்.

அப்போது ரவிசந்திரன் தரப்பை சேர்ந்த தேசிங்கு பாலன் என்பவர் காசிநாதன் தரப்பினரால் கொலை செய்யப்பட்டார். மீன்சுருட்டி போலிசார் காசிநாதன் தரப்பினர்மீது வழக்கு பதிவு செய்து அவர்களை சிறையில் அடைத்தார்கள். சிறிது நாட்கள் கழித்து அவர்கள் ஜாமீனில் வெளிவந்து ஊருக்கு வந்துவிட்டார்கள். தேசிங்கு பாலன்

கொலைக்குபின்னிட்டு ஆஜர் எதிரிகள் காசிநாதன், கொளஞ்சி, பிரபு ஆகியோர் வீடுகளை எரித்துவிட்டார்கள். கொளஞ்சி என் தகப்பனார். ஆடுமாடுகளில் சிலவற்றை எதிரிகள் எடுத்துசென்றுவிட்டார்கள். மற்றவற்றை வெட்டி ஊருக்கே விருந்து போட்டார்கள்.

காசிநாதன் தரப்பினர் பெயிலில் வெளிவந்ததிற்கு பிறகு சிறிது நாட்கள் கழித்து ஒருநாள் நானும், செல்லப்பனும் கொல்லைக்கு போயிகொண்டிருந்தபோது எதிரி சசிகலா, எதிரி பழனிசாமியின் வீட்டிற்குள் சென்றார். ( சாட்சி அனைத்து எதிரிகளையும் சரியாக அடையாளம் காட்டுகிறார்.) எதற்கு சம்மந்தமில்லாமல் சசிகலா பழனிசாமியின் வீட்டிற்குள் போகிறார் என்று நான் சந்தேகப்பட்டேன். நாங்கள் அந்த பக்கம் சென்று ஒளிந்திருந்து பார்த்தபோது பழனிசாமியின் வீட்டிற்குள்ளே எதிரிகள் திருஞானம், ரவிசந்திரன், பாரதிதாசன், காளிதாசன், சக்திவேல் மகன் ரமேஷ், பழனிசாமி ஆகியோர் பேசிகொண்டிருந்தார்கள்.

அப்போது எதிரி சசிகலா மற்றவர்களிடம் என் புருசனை கொன்றுவிட்டு என்னையும், என் குடும்பத்தையும் இளக்காரமாக பார்த்துகொண்டிருக்கிறார்கள், காசிநாதன் குடும்பத்தை அடியோடு அழிக்கவேண்டும், எனது சொத்தை விற்றாவது உங்களை நான் பெயிலில் வெளியே எடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். அதற்கு மற்ற எதிரிகள் நேரம்வரும்போது பார்த்துகொள்ளலாம் பொறுத்திரு என்று சொன்னார்கள்.

நான் பிரபுவிடமும், தர்மலிங்கத்திடமும் சென்று அச்சங்கதியை தெரிவித்து பார்த்து ஜாக்கிரதையாக இருக்கும்படி சொன்னேன். அதற்கு அவர்கள் தாங்கள் சேர்ந்து தான் போய்வந்துகொண்டிருப்பதாகவும், எதிரிகள் தரப்பில் அப்படிதான் பேசிக்கொண்டிருப்பதாகவும் சொல்லி அஜாக்கிரதையாக இருந்துவிட்டார்கள்.

15.05.2008 அன்று நானும், செல்லப்பனும் வண்ணாங்குளத்திற்கு குளிப்பதற்காக சென்றோம். நாங்கள் குளித்துவிட்டு திரும்ப நாடார்கடைக்கு அருகில் வந்துகொண்டிருந்தபோது எதிரிகள் ரவிசந்திரன், திருஞானம், விஜய், ஜவகர்பாபு, சுரேஷ், ராஜதுரை, தினேஷ் ஆகியோர் நாடார் கடையில் அருகே நின்று

பேசிகொண்டிருந்தார்கள். அவர்கள் நாளையுடன் காசிநாதன் குடும்பத்தை ஒழித்துகட்டிவிடலாம் என்று பேசிகொண்டிருந்தார்கள். நானும், செல்லப்பனும் அவர்கள் பேசியதை கண்டுகொள்ளாததுபோல் அதனை கடந்து வந்துவிட்டோம். அந்த நாடார் கடையானது வண்ணாங்குளத்திற்கு பக்கத்தில் இருந்தது.

அதற்கு மறுநாள் 16.05.2008 அன்று நானும், செல்லப்பனும் மாங்காய் பறிப்பதற்காக எங்கள் ஊருக்கு வெளியே இருக்கும் வாய்க்கால் அருகே சென்றோம். நாங்கள் காலை 9.00 மணி முதல் 9.30 மணிக்குள்ளாக திரும்பி வந்துகொண்டிருந்தபோது வெட்டுங்கடா வெட்டுங்கடா என்று சத்தம் கேட்டது. அப்போது நான் எனது வீட்டருகே வந்துகொண்டிருந்தேன். எனது வீடு காசிநாதன் வீட்டிற்கு பின்புறம் உள்ளது. அப்போது தான் சத்தம் கேட்டது. அலறல் சத்தமும் கேட்டது.

வேலாயுதம் வீட்டிற்கும், காமராஜ் வீட்டிற்கும் இடையில் ஒரு சந்து இருக்கிறது. அந்த சந்தில் சென்று நாங்கள் பார்த்தபோது அந்த சந்தில் மகாலிங்கம் ஒளிந்துகொண்டிருந்தார். நான் மகாலிங்கம் ஏன் இங்கே ஒளிந்துகொண்டிருக்கிறார் என்று பார்த்துவிட்டு அவரை கூப்பிடலாம் என்று சென்றபோது எதிரி ராஜதுரை மகாலிங்கத்தின் கழுத்தில் வெட்டிவிட்டார். நான் சந்தில் ஒளிந்துகொண்டேன். அப்போது எதிரி தினேஷ் வீச்சருவாளால் மகாலிங்கத்தின் வலது பக்க முகம் மற்றும் வலது தோள்பட்டை ஆகிய இடங்களில் வெட்டினார்.

பின்னிட்டு எதிரிகள் ராஜதுரையும், தினேசும் மகாலிங்கத்தை சரமாரியாக வெட்டினார்கள். மகாலிங்கம் வெட்டுபட்ட இடத்திற்கு அருகே மேற்குபக்கம் அலறல் சத்தம் கேட்டது. மகாலிங்கத்தை வெட்டிவிட்டு மேற்படி எதிரிகள் இருவரும் மேற்கே சென்றார்கள். நான் பின்னால் சென்று பார்த்தபோது வேலாயுதம் மற்றும் பூராசாமி ஆகியோர் வீட்டு வாசலில் தர்மலிங்கத்தின் தலையில்லாத உடல் முண்டமாக கிடந்தது. அந்த இடத்திற்கு 2 அடி துூரத்தில் காசிநாதன் குடல் சரிந்து இறந்துகிடந்தார். அதற்கு பக்கத்தில் ஜானகி வெட்டப்பட்டு மயக்கமாக கீழே கிடந்தார்.

தர்மலிங்கத்தின் தலை எங்கே என்று நான் பார்த்தபோது துாரத்தில் காளியம்மன் கோவில் அருகே 4 பெண்கள் நிற்பது தெரிந்தது. அதற்கு அருகேயுள்ள கோவில் சூலத்தில் தர்மலிங்கத்தின் தலை இருந்தது. காளியம்மன் கோவில் பின்புறம் 5 பெண்கள் நின்று பார்த்துகொண்டிருந்தார்கள். அங்கு தேசிங்குபாலன் வெட்டப்பட்ட இடத்தில் பிரபுவின் தலை அங்கு கிடந்தது. அங்கிருந்தவர்கள் போஸ்ட்ஆபிஸ் எதிர்புறம் இரண்டு பேர் இறந்துகிடப்பதாக சொன்னார்கள். நான் அங்கே சென்று பார்த்தபோது சூரியமூர்த்தி மகன் சுரேஷ் இறந்துகிடந்தார்.

அந்த இடத்திற்கு அருகே ரோடு திருப்பத்தில் சிமெண்ட் ரோட்டில் பிரபுவின் தலையில்லாத உடல் மட்டும் கிடந்தது. நான் உடனே வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். பாலுசாமி வீட்டிற்கும், எதிரி தினேஷ் வீட்டிற்கும் எதிர்புறம் தான் பிரபுவின் உடல் கிடந்தது. சம்பவம் நடந்த தினத்தன்று நான் பயந்துகொண்டு ஒளிந்துகொண்டேன் என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கல்லூரி படிப்பு முடித்துவிட்டு தற்போது மதுரையில் வேலைசெய்கிறேன். 16.05.2007 அன்று நான் 7 ஆம் வகுப்பு படித்துகொண்டிருந்தேன். போலிசார் விசாரணையில் நான் 7 ஆம் வகுப்பு படித்துகொண்டிருந்ததாக சொன்னேன். நான் போலிசார் விசாரணையில் கூலிவேலைக்கு போவதாக சொல்லியிருக்கிறேன். குடும்ப கஷ்டத்தின் காரணமாக அந்த சமயத்தில் நான் கூலிவேலைக்கும் சென்று கொண்டிருந்தேன் என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

போலிசார் விசாரணையில் நான் கூலிவேலைக்கு போவதாகவும், 7 ஆம் வகுப்பு படித்துகொண்டிருந்ததாகவும் சொல்லியிருக்கிறேன். வண்ணாங்குளத்தின் அருகே எதிரிகள் பேசிகொண்டிருந்தபோது மாலை 6.30 முதல் 7.00 மணி இருக்கும். எதிரிகள் அவ்வாறு பேசிகொண்டிருந்தது சம்பவதினத்திற்கு முதல்தினமாகும். நாங்கள் குளத்தில் குளித்துவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்தபோது தான் எதிரிகள் அவ்வாறு பேசிகொண்டிருந்தார்கள்.

நாடார்கடையின் அருகே நின்றுகொண்டு பேசிகொண்டிருந்தார்கள். நாடார் கடைக்கும், வண்ணாங்குளத்திற்கும் இடையே எவ்வளவு துாரம் என்றால் 10 அடி துாரம் தான் இருக்கும். கடைக்கும், குளத்திற்கும் இடையே ரோடு எதுவுமில்லை. வண்ணாங்குளத்திற்கு வடக்கு பக்கம் சுமார் 50 வீடுகள் இருக்கிறது. தெற்குபக்கம் சுமார் 200 வீடுகள் இருக்கும். மேற்குபக்கம் சுமார் 70 வீடுகள் இருக்கும். கிழக்கு பக்கம் 40 வீடுகள் இருக்கும்.

வண்ணாங்குளத்திற்கும் எனது வீட்டிற்கும் இடையே எவ்வளவு துாரம் என்றால் சுமார் 1/2 கி.மீ துாரம் இருக்கும். 20 நிமிடத்தில் நடந்து சென்றுவிடலாம். வண்ணாங்குளத்திலிருந்து பூராசாமி கடையை கடந்து தான் எனது வீட்டிற்கு போகமுடியும். எனது வீட்டிலிருந்து துரைசெல்வம் என்பவரது வீடு எவ்வளவு துாரத்தில் இருக்கிறது என்றால் அப்படி யாருடைய வீடும் எங்களது ஊரில் இல்லை. எங்களது வீட்டை எதிரிகள் சூறையாடிவிட்டதாக நான் சொல்லுவது சம்மந்தமாக எதாவது புகார் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் எனது வயது 15. அப்போது நான் 7 ஆம் வகுப்பு படித்துகொண்டிருந்தேன்.

தேசிங்குபாலன் இறந்து அன்றே எனது வீடு சூறையாடப்பட்டது. காசிநாதன் வீடு, பிரபுவின் வீடு ஆகியவையும் சூறையாடப்பட்டது. அதுதொடர்பாக என் தகப்பனார் புகார் கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. மேற்படி வீடுகள் சூறையாடப்பட்டது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. தேசிங்குபாலன் இறந்ததிற்கு பிறகு நான் வெளியூருக்கு போய்விட்டேன் என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தபோது எதிரிகள் மேற்கண்டவாறு வீடுகளை சூறையாடியது பற்றியும், ஆடுமாடுகளை எடுத்துகொண்டு விருந்து போட்டதுபற்றியும் சொல்லியிருக்கிறேன். அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு சம்பவஇடத்திற்கு வந்துவிட்டார்களா என்றால் நான் சென்று பதுங்கிவிட்ட காரணத்தினால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. சம்பவம் நடந்த மறுதினம் காசிநாதன் வீட்டில்வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

போலிசார் வீட்டிலிருந்ததை பார்த்து நான் எனது வீட்டைவிட்டு வெளியேவந்தபோது போலிசார் என்னை அழைத்து விசாரித்தார்கள். அப்போது போலிசார் காசிநாதன் வீட்டில் யாரை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. நான் எனது வீட்டில்தான் சென்று பதுங்கிகொண்டேன். நான் எத்தனை மணிக்கு சென்று வீட்டில் பதுங்கினேன் என்றால் சம்பவத்தை பார்த்துவிட்டு சுமார் 12.30 மணிக்கு வீட்டிற்கு சென்று பதுங்கிகொண்டேன்.

எனது வீட்டிற்கும், காசிநாதன் வீட்டிற்கும் இடையே சுமார் 10 அடிதொலைவு இருக்கும். நான் பயந்துகொண்டு வீட்டில் சென்று உட்கார்ந்துகொண்டேன். எனது வீட்டில் அந்த சமயத்தில் தொலைகாட்சி இல்லை. எத்தனை மணிவரை நான் வீட்டில் பதுங்கி இருந்தேன் என்றால் மறுநாள் தான் நான் வீட்டைவிட்டு வெளியே வந்தேன். மறுநாள் காலை 9.00 மணி முதல் 10.00 மணிக்குள்ளாக வெளியே வந்தேன். நான் வீட்டில் பதுங்கியிருந்தபோது என்னுடன் வேறு யார் இருந்தார்கள் என்றால் எனது அம்மா மட்டும் இருந்தார்.

சம்பவத்தினத்தன்று சுமார் 100 முதல் 150 போலிசார் எங்கள் ஊருக்கு வந்தார்கள். போலிசார் போஸ்ட்ஆபிஸ், வண்ணாங்குளம், மச்சகேந்திரன் வீட்டின் அருகே, காளியம்மன்கோவில், காசிநாதன் வீடு ஆகிய இடங்களில் போலிசார் இருந்தார்கள். சம்பவ தினத்தன்று காசிநாதன் வீட்டின் அருகே எத்தனை மணிக்கு போலிசார் வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. சம்பவத்தினத்தன்று காசிநாதன் வீட்டில் எத்தனை மணிவரை போலிசார் இருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

மச்சகேந்திரன் வீட்டிற்கு போலிசார் எத்தனை மணிக்கு வந்தர்கள் என்று எனக்கு தெரிவில்லை. அவரது வீட்டிலிருந்து போலிசார் எத்தனை மணிக்கு புறப்பட்டு சென்றார்கள் என்றும் எனக்கு தெரியவில்லை. போஸ்ட்ஆபிஸ் அருகே எத்தனைபோலிசார் இருந்தார்கள் என்று நான் எண்ணிபார்க்கவில்லை. காளியம்மன்கோவில் அருகே இருந்த போலிசார் எத்தனைமணிவரை அங்கு இருந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை.

சம்பவம் நடந்தஅன்று போலிசார் என் தாயாரை அழைத்து விசாரிக்கவில்லை. என் தகப்பனாரை விசாரித்தார்களா என்று எனக்கு தெரியவில்லை. சம்பவம் நடந்ததினத்தன்று எந்த நபர்களையும் போலிசார் என் முன்பாக விசாரணை செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

மயங்கிகிடந்த ஜானகியம்மாளுக்கு நான் தண்ணீர் கொடுத்து உதவினேனா என்றால் நான் பயத்தில் கிட்டே போகவில்லை. அந்த இடத்தில் ஜானகியம்மாள் எவ்வளவு நேரம் விழுந்துகிடந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. ஜானகியம்மாளை யார் மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள் என்று எனக்கு தெரியவில்லை. ஜானகியம்மாள் மயங்கி கிடந்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் இடையே 20 அடி தொலைவு இருக்கும்.

போலிசார் என்னை விசாரித்தபோது முதல்நாள் நான் பயத்தில் வீட்டில் பதுங்கி கொண்டேன் என்ற சங்கதியை சொல்லியிருக்கிறேன். எங்கள் ஊரில் ரவிசந்திரன் தலைமையில் ஒரு பிரிவினரும், காசிநாதன் தலைமையில் மற்றொரு பிரிவினரும் இருந்ததாக வழக்கிற்காக போலிசார் சொல்லிகொடுத்து பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், அப்படி இரண்டு பிரிவுகள் கிடையாது என்றாலும் சரியல்ல. தேசிங்குபாலனை யார் கொலை செய்தது என்றால் இரண்டு பிரிவுகளுக்கும் இடையே மோதல் நடந்தது அந்த கலவரத்தில் தேசிங்குபாலன் இறந்துவிட்டார்.

கலவரம் நடந்ததில் தான் தேசிங்குபாலன் இறந்துவிட்டதாக நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். இரண்டு கோஸ்டிகள் மோதலில் தான் தேசிங்குபாலன் இறந்துவிட்டார். அந்த சங்கதியை போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். காசிநாதன் கோஸ்டியினர் தேசிங்குபாலனை கொல்லவில்லை என்றால் அவர்கள் தான் கொன்றார்கள். தேசிங்குபாலன் கொலை சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் அப்போது நான் வெளியூரில் எனது மாமா வீட்டில் இருந்தேன்.

தேசிங்குபாலன் கொலையை நான் நேரில் பார்க்கவில்லை. எதிரி சசிகலா எதிரி பழனிசாமியின் வீட்டிற்குள் சென்று பேசிகொண்டிருந்தது தொடர்பாக நான் காசிநாதன்

குடும்பத்திற்கு தகவல் தெரிவித்தேன். காசிநாதன் குடும்பத்திற்கு நான் தகவல் சொன்னேன் என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லியிருக்கிறேன். சம்பவ தினத்தன்று போலிசார் எதிரிகள் யாரையாவது காவல்நிலையத்திற்கு அழைத்துசென்றார்களா என்று நான் பார்க்கவில்லை.

எதிரி சசிகலா மேற்கண்டவாறு பேசிகொ்ண்டிருந்த விவரத்தை தர்மலிங்கம் மற்றும் பிரபு ஆகியோரிடம் நான் தகவல் தெரிவித்ததாகவும், அதற்கு அவர்கள் நாங்கள் ஜாக்கிரதையாக இருப்பதாக சொன்னதாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்ல வில்லை. வண்ணாங்குளத்திற்கு அருகே 15.05.2008 அன்று எதிரிகள் பேசிகொண்டிருந்ததை நான் காசிநாதன் வீட்டில் தெரிவித்தேன்.

16.05.2008 அன்று நானும், செல்லப்பனும் மாங்காய் பறிப்பதற்காக ஊருக்கு வெளியே இருக்கும் வாய்க்காலுக்கு சென்றதாகவும், நாங்கள் திரும்பி வந்துகொண்டிருந்தபோது காலை 9.00 முதல் 9.30 மணிக்குள்ளாக வெட்டுங்கடா வெட்டுங்கடா என்று சத்தம் கேட்டதாகவும் நான் போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். சம்பவத்திற்கு முதல்தினம் காசிநாதன் வீட்டில் வைத்து தகவல் சொன்னேன்.

வேலாயுதம், காமராஜ் வீடுகளுக்கு இடைபட்ட சந்துபகுதியில் மகாலிங்கம் ஒளிந்திருந்தார் என்ற சங்கதியை நான் போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். அப்போது எதிரி ராஜதுரை மகாலிங்கத்தின் கழுத்தில் வெட்டினார் என்று நான் போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். அப்போது நான் அந்த சந்துபகுதியில் ஒளிந்துகொண்டதாக போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். நான் சுமார் 10 நிமிடம் ஒளிந்திருந்தேன். என்னுடன் செல்லப்பனும் ஒளிந்துகொண்டிருந்தார்.

எதிரி தினேஷ் மகாலிங்கத்தின் வலதுபக்க முகத்திலும், வலது தோள்பட்டையிலும் வெட்டினார் என்று நான் போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். பின்னிட்டு எதிரிகள் ராஜதுரையும், தினேசும் மகாலிங்கத்தை சரமாரியாக வெட்டினார்கள் என்று நான் போலிசார்விசாரணையில்

சொல்லியிருக்கிறேன். வேலாயுதம் மற்றும் பூராசாமி ஆகியோர் வீட்டுவாசலில் தர்மலிங்கத்தின் உடல் தலையில்லாமல் கிடந்தது என்றும் அதனை நான் பார்த்தேன் என்றும் போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

அந்த இடத்திலிருந்து சுமார் 2 அடிதூரத்தில் காசிநாதன் குடல்சரிந்து இறந்துகிடந்தார் என்று போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். தர்மலிங்கத்தின் தலை எங்கே இருக்கிறது என்று பார்த்தபோது அது காளியம்மன்கோவில் சூலத்தில் குத்தப்பட்டிருந்தது என்று போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். போஸ்ட்ஆபிஸ் எதிர்புறம் இரண்டுபேர் இறந்துகிடந்தார்கள் என்று போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

பாலுசாமி மற்றும் தினேஷ் வீட்டிற்கு எதிர்புறம் பிரபுவின் உடல் கிடந்தது என்று போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். சம்பவ சமயத்தில் பள்ளி விடுமுறையின்போது நான் விவசாயகூலிவேலைக்கு சென்றுவந்தேன். மாங்காய் இளநீர் பறிப்பதற்கு செல்வேன். சம்பவதினத்தன்று நான் ஊரில் இல்லை என்றாலும், விவசாய கூலிவேலை செய்வதற்கு வெளியூருக்கு போய்விட்டேன் என்றாலும், வேறு சாட்சிகள் யாரும் கிடைக்காத காரணத்தினால் போலிசார் என்னை இவ்வழக்கில் ஒரு பொய்சாட்சியாக ஜோடித்திருக்கிறார்கள் என்றாலும் சரியல்ல.

சம்பவதினத்திற்கு மறுதினம் போலிசார் என்னை விசாரித்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவத்தை நான் பார்த்ததாகவும், பார்த்துவிட்டு பதுங்கிகொண்டதாகவும் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. காசிநாதன் எனக்கு சின்ன தாத்தாவாக வேண்டும். காசிநாதன் எனக்கு உறவினர் என்பதால் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன நாள், நேரம், இடத்தில் எந்த சம்பவத்தையும் நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>6–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடன் பிறந்தவர் சுபாஷ். என் பெற்றோர்கள் கூலிவேலை தான் செய்கிறார்கள். எதிரிகள் பழனிசாமியின் வீட்டில் கூடி பேசியது, வண்ணாங்குளத்திற்கு அருகே கூடிபேசியது ஆகியவற்றை நான் எனது பெற்றோர்களிடம் சொல்லவில்லை. எதிரிகள் நாடார்கடையில் அருகே பேசிகொண்டிருந்தபோது வேறு யார் இருந்தார்கள் என்றால் நானும், செல்லப்பன் மட்டும்தான் இருந்தோம்.

அதுசம்மந்தமாக அந்த கடைகாரரை போலிசார் விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. நானும், செல்லப்பன் மட்டும்தான் மாங்காய் பறிப்பதற்காக சென்றோம். சம்பவம் நடந்தபோது என் வயதை ஒத்த வேறு சிறுவர்கள் யார்யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எங்களது வீடுகள் எரிக்கப்பட்டதாக சொல்லப்படும் சமயத்திலிருந்தே எங்கள் ஊரில் தொடர்ச்சியாக போலிசார்கள் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல.

எங்கள் ஊரில் பதற்றமான சூழல் இருந்துவந்ததால் சிறுவனான என்னை எனது பெற்றோர் வெளியே போவதற்கு அனுமதித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரிகள் கூடிபேசியிருந்தால் அதுதொடர்பாக நான் எதார்தமாக நான் எனது பெற்றோர்களுக்கு தான் தகவல் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல.

இறந்துபோன சுரேஷ் எனது தகப்பனார் கொளஞ்சியின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக எனது வயதை ஒத்த சிறுவர்களை போலிசார் சாட்சிகளாக விசாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் சொல்வது உண்மையாக இருந்தால் எனது பெற்றோர்களையும் எனது வயதில் ஒத்த சிறுவர்களையும் போலிசார் சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றால் என் தாயார் இந்த வழக்கில் ஒரு சாட்சி. என் தகப்பனார் இறந்துவிட்டார்.

குழந்தைசாட்சியை நீதிமன்றத்தில் விசாரித்தால் அதுவழக்கிற்கு வலுவாக இருக்கும் என்பதால் போலிசார் என்னை இவ்வழக்கின் பொய்சாட்சியாக சேர்த்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவம் எதனையும்

நேரில்பார்க்கவில்லை என்றாலும், நான் சம்பவஇடத்தில் இல்லை என்றாலும், நான் பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும், 6 ஆம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

<u>13 ஆம் எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பொறியியல் பட்டபடிப்பு படித்திருக்கிறேன். எனது வீடு காளியம்மன் கோவிலுக்கு தெற்கே இருக்கிறது. நான் முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தையும் போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். விட்டுபோன சங்கதிகள் என்று எதுவுமில்லை. மகாலிங்கத்தை வெட்டியதை மட்டும்தான் நான் பார்த்தேன். 13 ஆம் எதிரி பாரதிதாசன் வெளியூரில் வசிக்கிறார். அவ்வப்போது ஊருக்கு வந்துசெல்வார் என்று சாட்சி சுயமாக கூறுகிறார். அவர் கடந்த 20 ஆண்டுகளாக சிதம்பரத்தில் தமிழ்நாடு அரசுபோக்குவரத்து கழகத்தில் நடத்துநராக பணிபுரிந்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

நான் இளவர் நீதிகுழுமத்தில் சாட்சியம் அளித்திருக்கிறேன். எதிரி பழனிசாமி வீட்டில் எதிகள் கூடிபேசியதாக நான் அந்நீதிகுழுமத்தில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். 15.05.2008 அன்று வண்ணாங்குளம் அருகே நாடார்பெட்டிகடையில் வைத்து எதிரிகள் பேசிகொண்டிருந்ததாக நான் அக்குழுமத்தில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. சாட்சி தற்போது ஞாபகமில்லை என்று சொல்லுகிறார். சாட்சி தற்போது மாற்றி அவ்வாறு நான் சாட்சியம் அளிக்கவில்லை என்று சொல்லுகிறார்.

மகாலிங்கத்தை காமராஜ் வீட்டிற்கும், வேலாயுதம் வீட்டிற்கும் இடைபட்ட சந்துபகுதியில் வைத்து தான் வெட்டினார்கள் அதனை நான் அந்த சந்தில் நின்றுதான் பார்த்தேன். மேற்படி சந்துபகுதியிலிருந்து பார்த்தால் சுரேசை வெட்டியதாக சொல்லும் இடம் தெரியாது. பிரபு வெட்டப்பட்ட இடமும் தெரியாது. இளவர்நீதிகுழுமத்தில் நான் சாட்சியம் அளித்தபோது தர்மலிங்கத்தை பாஸ்கரன் இடதுகாலில் வெட்டியதாகவும், எதிரிகள் காளிதாசன், ஸ்ரீதர், ஜவர்பாபு, விஜய், சுரேஷ்ஆகியோர் தர்மலிங்கத்தை வளைத்துபிடித்து கீழே போட்டு அமுக்கிவிட்டார்கள் எ்ன்றும், சக்திவேல் மகன் ரமேஷ்

தர்மலிங்கத்தின் தலையை பட்டாகத்தியால் அறுத்துவிட்டார் என்றும் சொல்லியிருக்கிறேனா என்றால் அதுபற்றி நினைவில்லை.

நான் இளவர்நீதிகுழுமத்தில் சாட்சியம் அளித்தபோது ஜானகி எதிரிகளை பார்த்து என் மகனை கொன்றுவிட்டீர்கள் என் கணவரை விட்டுவிடுங்கள் என்று கத்திகொண்டே வந்ததாகவும், எதிரி திருவாளபுத்தூர் ரமேஷ் பட்டாகத்தியால் ஜானகியின் பின்கழுத்தில் வெட்டியதாகவும், தினேஷ் ஜானகியை உதைத்து கீழே தள்ளிவிட்டார் என்றும், வயிற்றில் ஏறிநின்று முகம், கை, கால் ஆகிய இடங்களில் ஜானகியை தினேஷ் வீச்சருவாளல் வெட்டியதாகவும், எதிரி காளிதாசன் ஜானகியை தலையில் வெட்டியதாகவும் சொல்லியுள்ளேனா என்று எனக்கு நினைவில்லை.

இளவர்நீதிகுழுமத்தில் நான் சாட்சியம் அளித்தபோது நான் 5 கொலைகளையும் நான் நேரில் பார்த்ததாக சொல்லவில்லை. நான் சொன்னதுபோல் எதிரி பழனிசாமியின் வீட்டில் நடந்ததாக சொல்லப்படும் கூட்டத்தில் எதிரி பாரதிதாசன் கலந்துகொள்ளவில்லை என்றாலும், நான் சொன்னதுபோல் அப்படி ஒரு கூட்டமே நடைபெறவில்லையென்றாலும் சரியல்ல.

இவ்வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், அதனால் தான் நான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், 13 ஆம் எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் கிடையாது என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

<u>**8-ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் 1 ஆம் வகுப்பு முதல் 7 ஆம் வகுப்பு வரை தோல்வியடையாமல் படித்தேனா என்றால் இரண்டுமுறை தோல்வியடைந்தேன். 16.05.2008 அன்று எனக்கு 12 அல்லது 13 வயதுதான் நடந்தது என்றால் சரியல்ல. 15 வயது. போலிசார் என்னை விசாரித்தபோது எனது பிறந்ததேதி சம்மந்தப்பட்ட ஆவணங்களை வாங்கிபார்க்கவில்லை. தேசிங்குபாலன் கொலை நடந்ததிற்கு பின்னிட்டு நான் வெளியூருக்கு போய்விட்டேன் என்றாலும், எனவே வழக்கு சம்பவம் தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல.

**<u>3 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் அரசுபள்ளியில்தான் படித்தேன். எனது வீட்டிற்கும், பள்ளிகூடத்திற்கும் இடையே 4 கி.மீ தொலைவு இருக்கும். பொதுவாக பள்ளி முடிந்து நான் மாலை 5.30 மணிக்கு வீட்டிற்கு திரும்புவேன். எதிரி பழனிசாமியின் வீடு கூரைவீடுதான். அந்த சங்கதியை நான் போலிசார்விசாரணையில் சொல்லவில்லை. குறிப்பாக எந்ததேதியன்று எதிரி பழனிசாமியின் வீட்டில் எதிரிகள் கூடிபேசினார்கள் என்று போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன்.

அந்த கூட்டம் சம்மந்தமாக நான் காசிநாதன் குடும்பத்திற்கு தகவல் சொன்னேன். அந்த விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. அப்படி எதிரிகள் கூடிபேசியதை நான் எந்த இடத்திலிருந்து பார்த்தேன் என்று நான் போலிசார்விசாரணையில் சொல்லியிருக்கிறேன். அப்படி சதிகூட்டம் நடந்தது எதனையும் நான் நேரில்பார்க்கவில்லை என்றாலும், நேரில் பார்த்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.